# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2347 - 2023 අගෝස්තු මස 25 වැනි සිකුරාදා - 2023.08.25

*2347 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 25 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி III - காணிகள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| காணி நிர்ணய அறிவித்தல்கள் | - |
| முன்னறிவித்தல்கள் | - |
| இறுதிக் கட்டளைகள் | - |
| காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் அறிவித்தல்கள் | - |
| அரசாங்க அதிபர்களினால் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| சிறுநிலச் சொந்தக்காரர் திட்டத்தின்கீழ் அறிவித்தல்கள் | - |
| நிர்ணய உத்தியோகத்தர்களினாற் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள் | - |
| காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்கள் | 296 |
| காணி மீட்டல் பற்றிய அறிவித்தல்கள் | - |
| நானாவித காணி அறிவித்தல்கள் | 302 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**
**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2023, செத்தெம்பர் மாதம் 15 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2023, செத்தெம்பர் மாதம் 01 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக் கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2023 ஆம் ஆண்டு சனவரி மாதம் 02 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*


411 - B 082487 - 353 (2023/08)

# நானாவித காணி அறிவித்தல்கள்

## காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்

காணி ஆணையாளர் நாயகத்தின் இலக்கம் : 4/10/75337.
காணி ஆணையாளர் இலக்கம் (மாகாணங்களுக்கிடையிலான): LC/PL/A4/2/1/II.

### அரச காணிப் பிரமாணங்களின் 21 (2) ஆம் பிரிவின் கீழ் விடுக்கப்படும் அறிவித்தல்

பொலன்நறுவை மாவட்டம், தமன்கடுவ பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட 172, பொலன்னறுவை நகர கிராம அலுவலர் பிரிவில் பொலன்நறுவை கிராமத்தில் குடியேற்ற உத்தியோகத்தரால் வரையப்பட்ட சுவட்டு வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளதும் 56 சுமார் பேர்ச் விஸ்தீரணமுள்ளதுமான அரச காணியை வர்த்தக நோக்கத்திற்காகக் குத்தகைக்கு தருமாறு கேட்டுத் லத்பந்துர என்டபிரைசஸ் (தனியார்) வரையறுக்கப்பட்ட நிறுவனம் விண்ணப்பித்துள்ளது என இத்தால் அறியத்தரப்படுகினது.

02. விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின்வருமாறு:

வடக்கு : வீதி ஒதுக்கம்;
கிழக்கு : எச். பி. டி. சமந்த என்பவரின் காணி;
தெற்கு : எச். டி. குணசிரி என்பவரின் காணி;
மேற்கு : ரஞ்சித் கம்லத் என்பவரின் காணி.

குறித்த காணி குத்தகைக்கு வழங்கப்படக் கூடியதாய் இருக்கின்றது. ஆகவேஈ அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனைகட்கும் கீழ்க் காணப்படும் நிபந்தனைகட்கும் அமைவாக இக்காணியை குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்** .- முப்பது (30) வருடங்கள் (2023.08.09 தொடக்கம் முன்னோக்கி).

(ஆ) **வருடாந்த குத்தகை**.- குத்தகை ஆரம்பமாகும் 2023 ஆம் வருடத்தில் வருடத்திற்கு மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியான ரூபா 5 மில்லியனுக்கு (ரூபா 5,000,000.00) குறைவாக உள்ள சந்தர்ப்பத்தில் குறித்த வருடத்திற்கான பிரதான மதிப்பீட்டாளரினால் மதிப்பீடு செய்யப்பட்ட சந்தைப் பெறுமதியில் 2% வருடாந்த குத்தகையாக கொடுபடல் வேண்டும். 2023 ஆம் வருடத்தில் வருடத்திற்கு மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியான ரூபா 5 மில்லியனுக்கு (ரூபா 5,000,000.00) அதிகமாக உள்ள சந்தர்ப்பங்களில் குறித்த வருடத்திற்கான பிரதான மதிப்பீட்டாளரினால் மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியின் 4% வருடாந்த குத்தகையாக கொடுபடல் வேண்டும். இக்குத்தகைப் பணம் ஐந்து வருடங்களுக்கு ஒருமுறை திருத்தியமைக்கப்படும். ஆயினும், திருத்தியமைக்கப்பட்ட குத்தகைப் பணம் முடிந்த ஐந்து வருடங்களில் இறுதியில் கொடுபட்ட வருடாந்த குத்தகை பணத்திற்கு 20% கூட்டி கொள்ளுதல் வேண்டும்.

**தவணைப்பணம்**.- அறவிடப்படமாட்டாது

(இ) குத்தகைக்காரரினால் இக்காணி சுப்பர் மார்கட் கட்டடம் அமைக்கும் நோக்கம் தவிர்ந்த வேறெந்த நோக்கத்திற்காகவும் பாவிக்கப்படல் கூடாது;

(ஈ) குத்தகைக்காரினால் குத்தகை ஆரம்பித்த திகதியிலிருந்து ஒருவருட காலத்திற்குள்ளாக பிரதேசச் செயலாளரின் மனம் திருப்தியுறும் வண்ணம் இக்காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(உ) பிரதேசச் செயலாளர், மற்றும் வேறு நிறுவனங்களினால் விதிக்கப்படும் ஏனைய விசேட நிபந்தனைகட்கும் இக்குத்தக கட்டுப்படும்;

(ஊ) கட்டப்பட்டுள்ள கட்டடங்கள் சிறந்த முறையில் பேணப்படல் வேண்டும்;

(எ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள போது குத்தகைக்காரர் குத்தகை வழங்கப்பட்ட நோக்கத்தை குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பூர்த்திசெய்யாத பட்சத்தில் குத்தகை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்;

(ஏ) 2023.08.09 ஆந் திகத்திலிருந்து குறைந்தது 05 வருடங்கள் நிறைவு பெறும் வரையினும் இக்காணி குத்தகைக்குப் பெற்ற நோக்கத்தை நிறைவு செய்வதற்கான கைமாற்றம் அல்லது கீழ் குத்தகைக்கு விடுதல் அனுமதியளிக்கப்பட மாட்டாது.

(ஐ) குத்தகை தொடர்ந்து செலுத்தப்படுதல் வேண்டும் செலுத்தப்பட தவறும் பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே நிறுத்தப்டுவதுடன் தொடர்ந்து குத்தகை செலுத்தப்படாத பட்சத்தில் குத்தகை மிகுதிக்கு 10% அபராதம் விதிக்கப்படும்.

இக் காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடாது என்பதற்குத் தகுந்த காரணங்களை வர்த்தமானி வெளியிடப்பட்ட தினத்திலிருந்து தினத்திலிருந்து ஆறு வாரங்களுக்குள்ளாக எனக்குக் கிடைக்கதக்கதாக எழுதி அனுப்பாது விடின் இக்குத்தகை வழங்கப்படும்.

டீ. யு. கே. சட்டன்நாயக்க,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்,
''மிஹிகெத்த மெதுர'',
காணிச் செயலகம்,
இல. 1200/6,
ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை.
2023, ஓகத்து 17.

08 - 1209

## காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்

காணி ஆணையாளர் நாயகத்தின் இலக்கம்.: 4/10/69586.
மாகாணக் காணி ஆணையாளரின் இலக்கம்.: EP/LB/LS/BAT/MN/KOM/33.

### அரச காணிப் பிரமாணங்களின் 21 (2) ஆம் பிரிவின் கீழ் விடுக்கப்படும் அறிவித்தல்

01. மட்டக்களப்பு மாவட்டம், மண்முனை வடக்கு பிரதேச செயலகத்திற்குச் சொந்தமான இலக்கம் 172, நாவலடி கிராம அலுவலர் பிரிவினைச் சேர்ந்த நாவலடி கிராமத்தின் குடியேற்ற அலுவலர் மூலம் வரையப்பட்ட நிலவரைபடத்தின் 01 ஏக்கர், 03 றூட், 7.07 பேர்ச் அளவுடைய அரச காணியினை வாணிப நடவடிக்கைகளின் பொருட்டு திரு. பாலசுப்பிரமணியம் கெங்கேசுவன் என்பவர் குத்தகைக்குக் கோருவதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

02. கோரியிருக்கும் நிலத்தின் எல்லைகள் பின்வருமாறு:

வடக்கு : வீதி;
கிழக்கு : வீதி;
தெற்கு : மனோகரி;
மேற்கு : வீதி.

03. கோரியிருக்கும் காணியினை குறித்த தேவையின் பொருட்டு குத்தகைக்கு வழங்க முடியும். இதன் பொருட்டு அரசின் அனுமதிக்கப்பட்ட குறித்த நிபந்தனைகள் மற்றும் கீழ் குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு உட்பட்டதாக காணியினைக் குத்தகைக்கு விடுவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்** .- முப்பது (30) வருடங்கள் (2023.07.19 ஆந் திகதியிலிருந்து 30 வருடங்களுக்கு).

(ஆ) **வருடாந்த குத்தகைப் பணம்**.- 2023 ஆம் வருடத்தில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதி ஐந்து மில்லியன் ரூபாவை விடவும் (ரூபா. 5,000,000.00) குறைவானதாக இருக்குமிடத்து பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் குறித்த வருடத்தின் காணியின் சந்தைப் பெறுமதியின் 2% ஆகும். 2023 ஆம் வருடத்தில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதி ஐந்து மில்லியன் ரூபாவை விடவும் (ரூபா 5,000,000.00) அதிகமாக இருக்குமிடத்து பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் குறித்த வருடத்தில் காணியின் சந்தைப் பெறுமதியின் 4% ஆகும். இக்குத்தகைப் பணமானது ஒவ்வொரு 05 வருடங்களுக்கு ஒரு முறையும் திருத்தப்பட வேண்டும் என்பதுடன், திருத்தப்பட்ட குத்தகைப் பணமானது நிறைவடைந்த ஐந்து வருட காலப் பகுதியில் இறுதி வருடத்தில் செலுத்தப்பட்ட குத்தகைப் பணத்தின் 20% சேர்க்கப்பட்டு வருடாந்த குத்தகையாகச் செலுத்தப்பட வேண்டும்.

**தவணைக் கட்டணம்**.- தவணைக் கட்டணம் அறவிடப்பட மாட்டாது.

(இ) குத்தகை ஆரம்பிக்கப்பட்ட தினத்திலிருந்து 1 வருட காலப் பகுதிக்குள் பிரதேச செயலாளரின் மனங் கவரும் வகையில் காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(ஈ) குத்தகைக்காரர் இக்காணியினை வாணிப நடவடிக்கைகள் தவிர்ந்த வேறு நடவடிக்கைகளின் பொருட்டு பயன்படுத்தக்கூடாது;

(உ) பிரதேச செயலாளர் மற்றும் ஏனைய நிறுவனங்கள் மூலம் விதிக்கப்பட்டிருக்கும் ஏனைய விசேட நிபந்தனைகளுக்கும் இக்குத்தகை கட்டுப்பட்டதாகும்;

(ஊ) காணியானது குத்தகைக்கு வழங்கப்பட்ட காலப் பகுதிக்குள் குத்தகையாளர் இக்காணியினைப் பெற்றுக் கொண்ட நோக்கத்தை உத்தேசித்த காலப் பகுதிக்குள் நிறைவேற்றிக் கொள்வதற்குத் தவறுமிடத்து இக்குத்தகையை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்;

(எ) 2023.07.19 ஆந் திகதியிலிருந்து 05 வருடங்கள் முடிவடையவதற்கு முன்னர் காணியினைப் பெற்றுக் கொண்ட நோக்கினை நிறைவேற்றுவதன் பொருட்டான துனைக் குத்தகைகள் அல்லது கைமாற்றங்கள் தவிர்ந்த, வேறு துணைக் குத்தகைகளோ அல்லது கைமாற்றங்களோ செய்ய அனுமதி வழங்கப்பட மாட்டாது;

(ஏ) குத்தகைப் பணத்தினை தொடர்ச்சியாகச் செலுத்துதல் வேண்டும். குத்தகைப் பணத்தைச் செலுத்தத் தவறும் பட்சத்தில் குத்தகை ஒப்பந்தமானது சுயமாகவே இரத்தாகும்.

வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து 06 வார காலப் பகுதிக்குள் குறித்த காணியைக் குத்தகைக்கு அனுமதிக்கக்கூடாதென ஏற்றுக் கொள்ளக்கூடிய காரணங்களைச் சுட்டிக்காட்டி எனக்கு அறிவித்தல் கிடைக்கப் பெறாவிடத்து கோரிக்கைக்கேற்ப காணி குத்தகைக்கு விடப்படும்.

எஸ். வீ. ஏ. டீ. ஐ. எம். சமரதுங்க,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்குப் பதிலாக.

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்,
"மிஹிகெத்த மெதுர",
காணிச் செயலகம்,
இல. 1200/6,
ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை.
2023, ஓகத்து 11.

08 - 1244

### காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்

காணி ஆணையாளர் நாயகத்தின் இலக்கம்.: 4/10/69585.
மாகாணக் காணி ஆணையாளரின் இலக்கம்.: EP/28/LB/BAT/KP/27.

### அரச காணிப் பிரமாணங்களின் 21 (2) ஆம் பிரிவின் கீழ் விடுக்கப்படும் அறிவித்தல்

மட்டக்களப்பு மாவட்டம், கோரளைப்பத்து, வாழைச்சேனை பிரதேச செயலகத்திற்குச் சொந்தமான இல. 203B, கும்புருமோலை கிராம அலுவலர் பிரிவின் கும்புருமோலை கிராமத்தின் குடியேற்ற உத்தியோகத்தர் மூலம் தயாரிக்கப்பட்ட நிலவரைபடத்தில் காட்டப்பட்டவாறான 01 ஏக்கர் அளவுடைய அரசுக்குச் சொந்தமான காணித் துண்டினை விவசாய நடவடிக்கைகளின் பொருட்டு திரு. கோணேசன் பிரகாஷ் என்பவர் குத்தகைக்குக் கோருவதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

02. கோரியிருக்கும் நிலத்தின் எல்லைகள் பின்வருமாறு:

வடக்கு : அரச காணி;
கிழக்கு : வீதி;
தெற்கு : அரச காணி;
மேற்கு : அரச காணி.

கோரியிருக்கும் காணியினை குறித்த தேவையின் பொருட்டு குத்தகைக்கு அனுமதிக்க முடியும். இதன்பொருட்டு அரசின் நியமிக்கப்பட்ட குறித்த நிபந்தனைகள் மற்றும் கீழே குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு உட்பட்டதாக காணியினைக் குத்தகைக்கு விடுவதற்கு அரச தீர்மானித்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்** .- முப்பது (30) வருடங்கள் (2023.04.07 ஆந் திகதியிலிருந்து 30 வருடங்களுக்கு).

**வருடாந்த குத்தகைப் பணம்**.- 2023 ஆம் வருடத்தில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதியானது ஐந்து மில்லியன் ரூபாவை விடவும் (ரூபா. 5,000,000.00) குறைவாக இருக்குமிடத்து பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் குறித்த வருடத்தின் காணியின் அதிகரிக்கப்படாத பெறுமதியின் 2% ஆகும். 2023 ஆம் வருடத்தில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதியானது ஐந்து மில்லியன் ரூபாவை விடவும் (ரூபா 5,000,000.00) அதிகமாக இருக்குமிடத்து பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் குறித்த வருடத்தில் காணியின் அதிகரிக்கப்படாத பெறுமதியின் 4% ஆகும். இக்குத்தகைப் பணமானது ஐந்து வருடங்களுக்கு ஒருமுறை திருத்தி அமைக்கப்பட வேண்டும் என்பதுடன், திருத்தி அமைக்கப்பட்ட குத்தகைப் பணமானது நிறைவடைந்த ஐந்து வருட காலப் பகுதியின் இறுதி வருடத்தில் செலுத்தப்பட்ட குத்தகைப் பணத்தின் 20% சேர்க்கப்பட்டு வருடாந்த குத்தகையாகச் செலுத்தப்பட வேண்டும்.

**தவணைக் கட்டணம்**.- தவணைக் கட்டணம் அறவிடப்பட மாட்டாது.

(ஆ) குத்தகை ஆரம்பிக்கப்பட்ட தினத்திலிருந்து 1 வருட காலப் பகுதிக்குள் பிரதேச செயலாளரின் மனம் திருப்தியுறும் வகையில் காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(இ) குத்தகைக்காரர் இக்காணியினை விவசாய நடவடிக்கைகள் தவிர்ந்த வேறு நடவடிக்கைகளின் பொருட்டு பயன்படுத்தக்கூடாது;

(ஈ) பிரதேச செயலாளர் மற்றும் ஏனைய நிறுவனங்கள் மூலம் விதிக்கப்பட்டிருக்கும் ஏனைய விசேட நிபந்தனைகளுக்கும் இக்குத்தகை கட்டுப்பட்டதாகும்;

(உ) காணியானது குத்தகைக்கு வழங்கப்பட்ட காலப் பகுதிக்குள் குத்தகையாளர் இக்காணியினைப் பெற்றுக் கொண்ட நோக்கத்தை உத்தேசித்த காலப் பகுதிக்குள் நிறைவேற்றிக் கொள்வதற்குத் தவறுமிடத்து இக்குத்தகையை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்;

(ஊ) 2023.04.07 ஆந் திகதியிலிருந்து 05 வருடங்கள் முடிவடையவதற்கு முன்னர் துணைக் குத்தகை செய்யவோ அல்லது வேறொருவருக்குக் கைமாற்றம் செய்யவோ அனுமதி வழங்கப்படமாட்டாது. அதன் பின்னர் துணைக் குத்தகை செய்வதோ அல்லது வேறொருவக்குக் கைமாற்றம் செய்வதோயாயினும் குறித்த நோக்கத்திற்காகவே செய்ய முடியும்;

(எ) குத்தகைப் பணத்தினை தொடர்ந்து செலுத்துதல் வேண்டும். குத்தகைப் பணத்தைச் செலுத்தத் தவறுமிடத்து குத்தகை ஒப்பந்தமானது சுயமாகவே இரத்தாகும்.

வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து 06 வார காலப் பகுதிக்குள் குறித்த காணியைக் குத்தகைக்கு அனுமதிக்கக்கூடாதென ஏற்றுக் கொள்ளக்கூடிய காரணங்களைச் சுட்டிக்காட்டி எனக்கு அறிவித்தல் கிடைக்கப் பெறாவிடத்து கோரிக்கைக்கேற்ப காணி குத்தகைக்கு வழங்கப்படும்.

எஸ். வீ. ஏ. டீ. ஐ. எம். சமரதுங்க,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்குப் பதிலாக.

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்,
"மிஹிகெத்த மெதுர",
காணி பிரதான செயலகம்,
இல. 1200/6,
ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை.
2023, ஓகத்து 11.

08 - 1245

## காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்

*காணி ஆணையாளர் நாயகத்தின் இலக்கம்.: 4/10/72289.*
*மாகாணக் காணி ஆணையாளரின் இலக்கம்.: NCP/PLC/L09/23/04.*

### 21 (2) இடப்பட்ட அரச காணி ஒழுங்குமுறையின் கீழ் செய்யப்படும் அறிவித்தல்

பொலன்னறுவை மாவட்டம், தமன்கடுவ பிரதேச செயலாளர் பிரிவிற்கு, இல. 189, கொடலீய கிராம அலுவலர் பிரிவில், கொடலீய கிராம அலுவலர் பிரிவில், கொடலீய கிராமத்தல் இலக்கம்: 461 உபவரைவில் துண்டு இலக்கம்: 2ல் காட்டப்பட்டுள்ள ஹெக்டயார் 20.1335 அளவிலான காணித்துண்டு, வணிக நடவடிக்கைகளுக்காக மஹவ சோலார் (பிரைவட்) லிமிட்டெட் வரி குத்தகைக்குட்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

02. கோரப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின்வருமாறு:

வடக்கு : எப். டி. பி. 9 துண்டு இலக்கம் 10003 இன் மிகுதிப் பகுதி மற்றும் இந்தவரைபடத்தில் துண்டு இலக்கம் 1;
கிழக்கு : வனப் பாதுகாப்பு;
தெற்கு : வனப் பாதுகாப்பு மற்றும் இந்த படத்தில் துண்டு இலக்கம் 3;
மேற்கு : இந்த வரைபடத்தில் துண்டு இலக்கம் 3 எப் . டி. பீ. 9 துண்டு இலக்கம் 10007 இன் மிகுதிப்பகுதி மற்றும் துண்டு இலக்கம் 10003 மிகுதிப்பகுதி.

கோரப்பட்டுள்ள காணி தேவைப்படும் காரணத்திற்காக குத்தகைக்கு அளிப்பதற்கு முடியும். அதனால் அரசினால் அனுமதிக்கப்பட்ட பிற நிபந்தனைகளுக்கு கீழ் காணியை குத்தகைக்கு அளிப்பதற்கு அரசினால் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(அ) **குத்தகைக் காலம் .-** 30 வருடம் (2023.07.26 ஆந் திகதியில் இருந்து 30 வருடங்கள்).

(ஆ) **வருடாந்த குத்தகைத் தொகை.-** 2023 ஆம் ஆண்டு காணியின் மதிப்பிடப்பட்ட பெறுமதி 5 மில்லியனுக்கும் (ரூபா. 5,000,000.00) குறையும் சந்தர்ப்பத்தில் தலைமை மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் மீது, அதே வருடத்தில் காணியின் சந்தைப் பெறுமதியில் 2%. 2023 ஆம் வருடத்தில் காணியின் மதிப்பீட்டு பெறுமதி ஐந்து மில்லியனுக்கு (ரூபா. 5,000,000.00) அதிகமாகும் சந்தர்ப்பத்தில் தலைமை மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் மீது, அந்த வருடத்தில் காணி சந்தை விலையின் பெறுமதி 4% வீதமாகும். இந்த குத்தகைப்பணம் 5 வருடத்திற்கொரு முறை திருத்தப்பட வேண்டும் என்பதோடு, அதற்கு முன்னர் 05 வருட இறுதியில் அறிவிடப்படும். வருடாந்த குத்தகைத் தொகைக்கு 20% வீதத்திற்கு சேர்க்கப்பட வேண்டும்.

**தவணைக் கட்டணம்.-** தவணைக் கட்டணம் அறவிடப்பட மாட்டாது.

(இ) இந்தக் காணி சூரிய சக்தி வேலைத் திட்டத்திற்காகவன்றி வேறு எதற்கும் உபயோகப்படக் கூடாது;

(ஈ) இந்தக் குத்தகை ஆரம்பிக்கப்பட்டு ஒரு வருடத்திற்குள் மாகாணக் காணி ஆணையாளர் / பிரதிக் காணி ஆணையாளர் / பிரதேச செயலாளர் ஆகியோரின் எண்ணங்களுக்கேற்ப அபிவிருத்தி செய்யப்பட வேண்டும்;

(உ) மாகாண காணி ஆணையாளர் / பிரதேச செயலாளர் மற்றும் ஏனைய நிறுவனங்களினால் விடுக்கப்படும். ஏனைய விசேடமான நிபந்தனைகளுக்கும் இந்தக் குத்தகை ஆட்படவேண்டும்;

(ஊ) நிர்மாணிக்கப்பட்டுள்ள/செய்யப்பட்டுள்ள கட்டிடம் நல்ல அபிவிருத்தி நிலையத்தில் நடாத்திச் செல்ல வேண்டும்;

(எ) காணி குத்தகைக்கு அளிக்கப்பட்டுள்ள காலத்தில் குத்தகையாளரால் காணியைப் பெற்றுக் கொண்ட விடயங்களை உரிய காலத்திற்குள் சாதித்துக் கொள்ள முடியாது போகுமிடத்து குத்தகையை முடித்துக் கொள்வதற்காக செயற்படுத்தப்படும்;

(ஏ) 2023.07.26 ஆம் திகதியில் இருந்து 05 வருடங்கள் வரை இந்தக் காணியை குத்தகைக்கு கொடுத்த காரணங்களை அடைவதற்காக இடைக்காலக் குத்தகை அல்லது ஒப்படைத்தல், தவிர வேறு இடைக்கால குத்தகை கொடுத்தலுக்காக அனுமதி அளிக்கப்பட மாட்டாது.

(ஐ) குத்தகைக் கூலியை இடைவிடாது செலுத்த வேண்டும் என்பதோடு, குத்தகையைப் புறக்கணிக்கும் சந்தர்ப்பத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்துச் செய்யப்படும். குத்தகையை தொடர்ந்து செலுத்த முடியாத சந்தர்ப்பத்தில் செலுத்தப்பட வேண்டிய, நிலுவை குத்தகைத் தொகைக்கு 10% தண்டப்பணம் செலுத்த வேண்டும்.

வர்த்தமானி (கெஸட்) பத்திரிகை வெளியிடப்பட்ட தினத்தில் இருந்து 06 வாரங்களுக்கு இடையில் உரிய காணி குத்தகைக்கு அளிக்கக் கூடாது என ஏற்றுக் கொள்ளப்படும் காரணங்களை எழுதி எனக்கு முன்வைக்கப்படாது போனால் கோரிக்கையின் படி குத்தகை அளிக்கப்படும்.

டி. யூ. கே. சட்டன்நாயக,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்,
"மிஹிகெத்த மெதுர",
காணிச் செயலகம்,
இல. 1200/6,
ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை.
2023, ஓகத்து 23.

08 - 1251

## காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்

காணி ஆணையாளர் நாயகத்தின் இலக்கம்.: 4/10/69031.
மாகாணக் காணி ஆணையாளரின் இலக்கம்.: LC/PL/A5/2/3.

## அரச காணிப் பிரமாணங்களின் 21 (2) ஆம் பிரிவின் கீழ் விடுக்கப்படும் அறிவித்தல்

பொலன்னறுவை மாவட்டம், ஹிங்குரங்கொட பிரதேச செயலகத்திற்குச் சொந்தமான இலக்கம் 73, சிரிகெத்த கிராம அலுவலர் பிரிவினைச் சேர்ந்த டில்சன்பார்க் கிராமத்தின் நில அளவைப் படத்தில் காட்டப்பட்டுள்ளவாறு 01 ஏக்கர் அளவுடைய காணித் துண்டினை வியாபார நடவடிக்கைகளின் பொருட்டு திரு. அபேசிங்க அச்சிகே ஹெசான் ரசங்க பெரேரா என்பவர் குத்தகைக்குக் கோருவதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

02. கோரியிருக்கும் நிலத்தின் எல்லைகள் பின்வருமாறு:

வடக்கு : இல. 11 மற்றும் இல. 12 காணி;
கிழக்கு : இல. 16 மற்றும் இல. 17 காணி;
தெற்கு : இல. 11 காணி;
மேற்கு : பதை ஒதுக்கம்.

கோரியிருக்கும் காணியினை குறித்த தேவையின் பொருட்டு குத்தகைக்கு வழங்க முடியும். இதன்பொருட்டு அரசின் அனுமதிக்கப்பட்ட குறித்த நிபந்தனைகள் மற்றும் கீழே குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு உட்பட்டதாக காணியினைக் குத்தகைக்கு விடுவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்** .- முப்பது (30) வருடங்கள் (2023.03.31 ஆந் திகதியிலிருந்து 2053.03.30 வரை).

**வருடாந்த குத்தகைப் பணம்**.- குத்தகை அமுல்படுத்தப்படும் வருடத்தில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதி ஐந்து மில்லியன் ரூபாவை விடவும் (ரூபா 5,000,000.00) குறைவானதாக இருக்குமிடத்து பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் குறித்த வருடத்தின் காணியின் சந்தைப் பெறுமதியின் 2% ஆகும். குத்தகை அமுல்படுத்தப்படும் வருடத்தில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதி ஐந்து மில்லியன் (ரூபாவை விடவும் (ரூபா. 5, 000,000.00) அதிகமாக இருக்குமிடத்து பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் குறித்த வருடத்தில் காணியின் சந்தைப் பெறுமதியின் 4% ஆகும். இக்குத்தகைப் பணமானது ஒவ்வொரு ஐந்து வருடங்களுக்கு ஒரு முறையும் திருத்தப்பட வேண்டும் என்பதுடன், திருத்தப்பட்ட குத்தகைப் பணமானது நிறைவடைந்த ஐந்து வருட காலப் பகுதியில் இறுதி வருடத்தில் செலுத்தப்பட்ட குத்தகைப் பணத்தின் 20% சேர்க்கப்பட்டு வருடாந்த குத்தகையாகச் செலுத்தப்பட வேண்டும்.

**தவணைக் கட்டணம்**.- தவணைக் கட்டணம் அறவிடப்பட மாட்டாது.

(ஆ) குத்தகை ஆரம்பிக்கப்பட்ட தினத்திலிருந்து 1 வருட காலப் பகுதிக்குள் பிரதேச செயலாளரின் மனங் கவரும் வகையில் காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(இ) குத்தகைக்காரர் இக்காணியினை வியபார நடவடிக்கைகள் தவிர்ந்த வேறு நடவடிக்கைகளின் பொருட்டு பயன்படுத்தக்கூடாது;

(ஈ) பிரதேச செயலகம் மற்றும் ஏனைய நிறுவனங்கள் மூலம் விதிக்கப்பட்டிருக்கும் ஏனைய விசேட நிபந்தனைகளுக்கும் இக்குத்தகை கட்டுப்பட்டதாகும்;

(உ) நிர்மாணிக்கப்பட்டிருக்கும் கட்டங்களை முறையாக அபிவிருத்தி செய்து பேணுதல் வேண்டும்;

(ஊ) காணியானது குத்தகைக்கு வழங்கப்பட்ட காலப் பகுதிக்குள் குத்தகையாளர் இக்காணியினைப் பெற்றுக் கொண்ட நோக்கத்தை உத்தேசித்த காலப் பகுதிக்குள் நிறைவேற்றிக் கொள்வதற்குத் தவறுமிடத்து இக்குத்தகையை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்;

(எ) 2023.03.31 ஆந் திகதியிலிருந்து 05 வருடங்கள் முடிவடையவதற்கு முன்னர் காணியினைப் பெற்றுக் கொண்ட நோக்கினை நிறைவேற்றுவதன் பொருட்டான துணைக் குத்தகைகள் அல்லது கைமாற்றங்கள் தவிர்ந்த, வேறு துணைக் குத்தகைகளோ அல்லது கைமாற்றங்களோ செய்ய அனுமதி வழங்கப்பட மாட்டாது;

(ஏ) குத்தகைப் பணத்தினை தொடர்ச்சியாகச் செலுத்துதல் வேண்டும். குத்தகைப் பணத்தைச் செலுத்தத் தவறும் பட்சத்தில் குத்தகை ஒப்பந்தமானது சுயமாகவே இரத்தாகும் குத்தகைப் பணமாது தொடர்ச்சியாகச் செலுத்தப்படாத சந்தர்ப்பங்களில் செலுத்த வேண்டியிருக்கும் நிலுவைக் குத்தகையின் பொருட்டு 10% தண்டப் பணமும் அறவிடப்படும்.

வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து 06 வார காலப் பகுதிக்குள் குறித்த காணியைக் குத்தகைக்கு அனுமதிக்கக்கூடாதென ஏற்றுக் கொள்ளக்கூடிய காரணங்களைச் சுட்டிக்காட்டி எனக்கு அறிவித்தல் கிடைக்கப் பெறாவிடத்து கோரிக்கைக்கேற்ப காணி குத்தகைக்கு விடப்படும்.

T. U. K. சட்டன்நாயக்க,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்குப் பதிலாக.

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்,
"மிஹிகெத்த மெதுர",
காணிச் செயலகம்,
இல. 1200/6,
ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை.
2023, ஓகத்து 11.

08 - 1252